செ. கு. எண்: 189 நாள் :14.12.2015

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 14.12.2015

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை மற்றும் தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பெய்த கன மழையினால் 2.12.2015 அன்று சென்னை, எழும்பூர் வட்டம், கீழ்ப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த திரு. வெங்கடேசன் என்பவரின் மகன் ரவிக்குமார்;

3.12.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், வேளூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மணி என்பவரின் மகன் பாக்கியராஜ்; ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் என்பவரின் மனைவி சுசீலா; மகள் விஜயலட்சுமி மற்றும் மகன் வெங்கடேஷ்;

சென்னை, மயிலாப்பூர் பகுதியைச் சேர்ந்த திரு. ராஜா என்பவரின் மகன் தயாளன்; புரசைவாக்கம் வட்டம், ஓட்டேரி பகுதியைச் சேர்ந்த திரு. பலராமன் என்பவரின் மகன் லட்சுமிபதி; கிண்டி வட்டம், ஈக்காட்டுத்தாங்கல் பகுதியைச் சேர்ந்த திரு. பாலசந்திரன் என்பவரின் மனைவி சங்கராந்தி மற்றும் மகன் சீனிவாஸ்;

4.12.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், ஏமப்பேர் கிராமத்தைச் சேர்ந்த திரு. காமதேனு என்பவரின் மகன் பிரபு;

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், பெரியகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாணிக்கம் என்பவரின் மகன் சாமிநாதன்;

5.12.2015 அன்று கல்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. கெல்லன் என்பவரின் மகன் சின்னத்தம்பி;

6.12.2015 அன்று திருப்போரூர் வட்டம், சிறுங்குன்றம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் என்பவரின் மனைவி சரஸ்வதி; மதுராந்தகம் வட்டம், கெண்டரைச்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. கன்னியப்பன் என்பவரின் மகன் நொச்சிலி;

சென்னை, மயிலாப்பூர், கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த திரு. மாரி என்பவரின் மகன் பாஸ்கர்;

8.12.2015 அன்று தேனி மாவட்டம், கொடுவிலார்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்தையா என்பவரின் மனைவி கிருஷ்ணம்மாள்;

9.12.2015 அன்று திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், புங்கம்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. அண்ணாமலை என்பவரின் மகன் பரசுராமன்;

——ஆகியோர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

4.12.2015 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மகனூர்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்த கவுண்டர் என்பவரின் மகன் பெரியதம்பி;

7.12.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், வடகுச்சிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பரந்தாமன் என்பவரின் மகன் அகிலன்;

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சொக்கலிங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜாமணி என்பவரின் மகன் சசிக்குமார்;

8.12.2015 அன்று திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், காரங்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. பிறவிப் பெருமாள் என்பவரின் மகன் ஆறுமுக நயினார்;

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், முத்தனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கட்டையன் என்பவரின் மகன் முனியன்;

—— ஆகியோர் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

8.12.2015 அன்று தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், ஈச்சங்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவரின் மனைவி மாரியம்மாள்;

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், செம்பொன் நெறிஞ்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. மூக்கையா என்பவரின் மகன் பழமுதிர்சோலை;

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், வேலப்பாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் என்பவரின் மகன் செல்வம்;

-- ஆகியோர் மழையின் காரணமாக மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டில் பெய்த கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **25** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**